மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிச் சிறைச்சாலை உருவாக்குகின்ற அளவுக்கு பெண் குற்றவாளிகள் உருவாகவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரையிலும் வேலூரிலும் தண்டிக்கப்பட்ட பெண் கைதிகளுக்கு அங்கே இடம் ஒதுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். நீலகிரி, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களுக்கு கோயம்புத்தூரில் அந்தமாதிரி பெண்களுக்கு என்று தனிச் சிறைச்சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதுபோல வேலூர், மதுரை ஆகிய இரண்டு இடங்களிலே போதுமான வசதியும் வாய்ப்பும் இருக்கிறது. எனவே, புதியதாக சிறைச்சாலை தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 222, திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) அவருக்குப் பதிலாக திருமதி ஏ.எஸ், பொன்னம்மாள், பேசுகிறார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

222–

அரசு அச்சகத் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு இரவு நேரப்படியை உயர்த்துதல்

**11245–*திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இரவு நேரப்படி மற்றும் பன், டீ-க்கான படி ஆகியவற்றை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நடவடிக்கை எடுக்கும்.

1994 ஏப்ரல் 8]

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லுகின்றார்கள். அப்படி என்றால், ஒரு டீ-க்கு எவ்வளவு? ஒரு காப்பிக்கு எவ்வளவு? அதற்கு எவ்வளவு உயர்த்தப்படும்? ஒரு டீ, காப்பி இன்றைக்கு எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலேயே ரூ.2.50 ஆகிறது. எனவே, அங்கே எவ்வளவு உயர்த்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்கு பன், டீ ஆகியவற்றுக்காக 20 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது 30 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதேபோல இரவு நேரப்படி நாள் ஒன்றுக்கு ரூ.2.50–ல் இருந்து ரூ.3.50 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் மொத்தமாக ரூ.35.25 செலவாகிறது. அதுமட்டுமல்ல, இதைப்பற்றி நேற்றே நான் அவையில் அறிவித்தேன். அதுமட்டுமல்ல, கிடங்குகளில் இருப்பவர்களுக்கெல்லாம் இந்த உதவி இல்லாமல் இருந்தது. அவர்கள் 229 பேர். அவர்களுக்கும் சேர்த்து இந்த மாதத்திலிருந்து வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நம்முடைய அரசு அச்சகத்தில் பணம் கொடுப்பதை விட்டுவிட்டு, ஒரு கேன்டீனை அமைத்து அந்தத் தொழிலாளர்களுக்கு டீ, பன் போன்றவற்றைக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 223, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

223–

சேலம் பெருமாகவுண்டம்பட்டியில் குடியிருப்புப் பட்டா இலவசமாக வழங்குதல்

***20421– திரு. க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சேலம் தாலுகா, பெருமாகவுண்டம்பட்டி கிராமத்தில் ச.நெ.20/2, 22/2, 26/2, 28/1 மற்றும் 28/3 மேய்ச்சல் தரைப் புறம்போக்கில் வீடுகட்டிக் குடியிருப்பவர்களுக்கு கிராம நத்தமாக மாற்றி இலவசமாகப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?